**18 வது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.**

**முன்னிலை–திரு. இரா. கார்த்திகேயன், பி.ஏ., பி.எல்.,**

**18 வது உதவி நீதிபதி (FAC)**

**2026 ம் வருடம் ஜூலை மாதம் 29 ம் தேதி, புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்: 4890/2018**

**(CNR No.–TNCH01-009594-2018)**

1. திரு. ஆ. ராஜ்கன்(இறந்துவிட்டார்),
   த.பெ.ஆறுமுகம்.

2. ஆ. ஞாணசௌந்தரி,
   (Ganasoundari)
   க/பெ. ஆறுமுகம்.

3. ரா.தர்ஷன்,
   த/பெ. ராஜ்கன்.

4. ரா.வருண்.
   த/பெ. ராஜ்கன்.
   (3, 4 இளவர் வாதிகளுக்காக அவர்களின் பாதுகாவலர்
   பாட்டி திருமதி.ஞாணசௌந்தரி.)
   (அனைவரும் விலாசம் எண்.23,
   திரு.வி.க.நகர், 9 வது தெரு,
   பெரம்பூர் பாரக்ஸ், சென்னை – 600 012
   என்ற முகவரியில் வசித்து வருகின்றனர்.)

**... வாதிகள்**

**..எதிர்...**

1. மருத்துவர்.க. கஜேந்திர ராஜ்(எம்.எஸ்)
த/பெ.கணேசன்,
மூத்த பொது அறுவை சிகிச்சை நிபுணர்,
அரசு பொது மருத்துவமனை,
செங்கல்பட்டு– 603 002.

2. திருமதி. பிரிசில்லா,
க/பெ. க. கஜேந்திர ராஜ்
(இருவரும் விலாசம் எண், 14/73,
முதல் தளம், கன்னியா தெரு,
அமிஞ்சிகரை, சென்னை – 600 029 ல்
வசிக்கின்றனர்.)

**... பிரதிவாதிகள்**

இந்த வழக்கு 17.07.2026 ம் தேதி அன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர். எஸ். தாமஸ் பாரிமன்னன், முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர், ஆர்.சுப்பிரமணியன் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதுரை மற்றும் இரு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று பிறப்பிக்கப்படும்,

## தீர்ப்பு

உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 37 விதி 1 மற்றும் 2–ன் கீழ், பிரதிவாதிகள் ரூபாய் 4,96,932/–னையும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி முதல் இந்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் வட்டி சேர்த்து தொகை திரும்ப செலுத்தும் வரை ஏற்படும் வட்டியையும் சேர்த்து வாதிகளுக்கு வழங்க வேண்டுமென கோரியும், வழக்கு செலவு தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்ய அனுமதி பெற்று, இருதரப்பும் கேட்கப்பட்டது.

**1. வாதிகளின் திருத்தப்பட்ட வழக்குரை சுருக்கம்:**

(i) அசல் வழக்கின் 1ம் வாதி வழக்கு நிலுவையில் இருந்த பொழுது இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் 2, 3, 4 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ii) 1ம் வாதியின் மூத்த சகோதரர் திரு. அருணாச்சலம் என்பவர் மகாராஷ்டிரா வங்கியில் பணிபுரிந்து வருகின்றார். கடந்த 2015ம் வருடம் டிசம்பர் மாதம் அவர், அவரின் நெருங்கிய நண்பர் பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் பணிபுரியும் திரு.இளங்கோவன் என்பவரை 1ம் வாதியின்

வீட்டிற்கு அழைத்து வந்தார். மேற்படி இளங்கோவன் 1ம் வாதியிடம் 1ம் பிரதிவாதிக்கு அவசரமாக அவரது குடும்ப செலவுக்காக ரூ.10,00,000/- தேவை படுவதாக கூறியுள்ளார். 1ம் வாதி, மேற்படி அருணாச்சலம் மீது வைத்துள்ள நல்ல நம்பிக்கையின் பேரில் ரூ.3,00,000/-னை கடனாக கொடுத்துள்ளார், மீதம் உள்ள ரூ.7,00,000/-ஐ அவரது சகோதரர் திரு.ஏ.மோகன், சகோதரி A. சுகுணா ஆகியோரிடம் இருந்து பெற்று தருவதாக கூறினார். மேற்படி 1ம் வாதி சொன்ன அவரின், சகோதர, சகோதரியும் அவ்வாறு கடன் கொடுக்க ஒப்புக் கொண்டனர். அதன்படி, திரு. மோகன் என்பவர் ரூ.3,00,000/-மும் A.சுகுணா ரூ.4,00,000/-மும் 1ம் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்துள்ளனர். அதேபோல் 1ம் வாதியும் ரூ.3,00,000/-ஐ 1ம் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தார். 1ம் வாதி TVS என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்து அந்த வருமானத்தினை தனியாக சேர்த்து வைத்திருந்தார்.

(iii) மேற்படி, ரூ.3,00,000/-ஐ 1ம் வாதி கடந்த 12.12.2015ம் தேதி ரொக்கமாக 1ம் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தார். அதனை பெற்றுக் கொண்ட 1ம் பிரதிவாதி கடன் ஆவணம் ஒன்றினை ரூ.50 மதிப்புள்ள

முத்திரைத்தாளில் 12.12.2015 ம் தேதி ரூ.3,00,000/—ற்காக ஏற்படுத்தி கொடுத்தார். பின் இரு பிரதிவாதிகளும் கூட்டாக 12.12.2015 ம் தேதியே முத்திரை இரசீது(Stamp receipt) ஒன்றினை மேற்படி தொகைக்கு ஏற்படுத்தி கொடுத்தனர். அதே சமயம் 1ம் பிரதிவாதி 12.12.2015 தேதியில் பிராமிசரி நோட்டு ஒன்றினையும் மேற்படி தொகைக்கு எழுதிக் கொடுத்தார். அதில் 2ம் பிரதிவாதி சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். மேலும் பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை 12%ஆண்டு வட்டி சேர்த்து திரும்ப தருவதாக உறுதி அளித்தனர்.

(iv) 1ம் வாதி பலமுறை மேற்படி கடன் தொகையை 1,2 பிரதிவாதிகளிடம் திரும்ப கேட்டுள்ளார், அவர்கள் மேற்படி கடன் தொகை ரூ.3,00.000/—ஐ, 1ம் வாதிக்கு திரும்ப தரவில்லை. 1ம் வாதியின் சகோதர் மேற்படி கடன் பரிவர்த்தனையில் மத்தியஸ்தராக இருந்ததால் அவர் 1,2 பிரதிவாதிகளிடம் நேரில் பலமுறை அணுகி கடனை திரும்ப கேட்ட பொழுதும் அவர்கள் 1ம் வாதிக்கு கடன் தொகையை திரும்ப தராமல் பொய்யான பதில்கள் கூறிவந்தனர். பின்னிட்டு மேற்படி அருணாச்சலம், 1ம் பிரதிவாதியை அவர் பணிபுரிந்த மருத்துவமனையில் கடந்த 13.09.2017 ம்

தேதி நேரில் சந்தித்த போது 1ம் பிரதிவாதி தன்னிச்சையாக எந்தவித தூண்டுதலும் இல்லாமல் மேற்படி அருணாச்சலத்திற்கு ஆதரவாக அவர் பெயரில் 1ம் வாதி, அவரது சகோதரர் மோகன், சகோதரி சுகுணா ஆகியோர் கொடுத்த மொத்த கடன் ரூ.10,00,000/- யையும் 30.10.2017 தேதிக்குள் திரும்ப தருவதாக உறுதிமொழி கடிதம் ஒன்று எழுதிக் கொடுத்தார். அதனை அருணாச்சலம் 1ம் வாதி, மோகன், சுகுணா ஆகியோரிடம் ஒப்படைத்தார். மேற்படி கடித்தினை 1ம் பிரதிவாதி அவரது கைப்பட எழுதிக் கொடுத்துள்ளார் அதில் அவரது கையொப்பம் செய்து கொடுத்தார், மேற்படி கடிதம் அருணாச்சலம் என்பவர் பெயரில் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு இருந்தாலும், அது 1ம் வாதி, மோகன், சுகுணா ஆகியோர் கொடுத்த கடன் தொகைக்குதான் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. அதனை 1ம் வாதி 12.12.2015 தேதியிட்ட கடன் ஆவணங்கள் மற்றும் 02.02.2016 தேதி கடன் புதுப்பிப்பு ஆவணத்துடன் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(v) 1ம் பிரதிவாதி அரசு மருத்துவர். இரண்டாம் பிரதிவாதி அவரது மனைவி, அவர்கள் நன்கு படித்தவர்கள், ஆகவே அவர்கள் கடந்த

12.12.2015ம் தேதி 1ம் வாதியிடம் பெற்ற கடன் ரூ.3,00,000/- மறுக்க இயலாது.

(vi) கடந்த 05.02.2018ம் தேதி 1ம் வாதி, பிரதிவாதிகளுக்கு கடன் தொகை ரூ.3,00,000/- ஐ 20.12.2015 தேதி முதல் 2 சதவிகித மாத வட்டியுடன் திரும்ப செலுத்த கோரி சட்ட அறிவிப்பினை அனுப்பினார். பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை வேண்டுமெற்றே பெற மறுத்து விட்டனர். பின் 1ம் வாதி விசாரிக்கையில் பிரதிவாதிகள் அவர்கள் வீட்டினை சென்னை, அமைந்தகரை பகுதியில் வழக்கு தலைப்பில் சொல்லப்பட்டுள்ள முகவரிக்கு மாற்றிவிட்டனர் என தெரியவந்தது. பிரதிவாதிகள் (1) 20.12.2018 தேதியிட்ட கடன் ஆவணம், (2) 20.12.2015 தேதியிட்ட பிராமிசரி நோட்டு (3) 20.12.2015 தேதியிட்ட இரசீது (4) 13.09.2017 தேதியிட்ட உறுதிமொழி கடிதம் ஆகிய ஆவணங்களை 1ம் வாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தி கொடுத்துள்ளனர்.

(vii) பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகை ரூ.3,00,000/- ஐ 12.12.2015 முதல் 09.09.2018 வரை 2% மாத வட்டியுடன் சேர்த்து

ரூ.4,96,932 ஐ 1ம் வாதிக்கு தர வேண்டும், அதில் வட்டி தொகை ரூ.1,96,932/− ஆகும்.

(viii) 1ம் பிரதிவாதி வழக்கு சொத்து விபரத்தில் சொல்லப்பட்ட சொத்திற்கு உரிமையாளர் ஆவார். அதனை அவர் விற்க முயன்றுவருகின்றார். ஆகவே 1ம் வாதிக்கு பிரதிவாதிகள் மேற்படி கடன் ரூ.4,96,932/−னை திரும்ப வழங்க வேண்டும் என்பதே வாதிகள் வழக்குரை சுருக்கம் ஆகும்.

2. பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:

(i) வாதி வழக்குரை சங்கதிகள் உண்மையானவைகள் அல்ல. 1ம் பிரதிவாதிக்கு இளங்கோவன் என்பவரை தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு வாதியை தெரியாது, அவரை 1ம் பிரதிவாதி தன் வாழ்நாளில் பார்த்தது இல்லை, வழக்குரை சங்கதிபடி வாதிக்கு 1ம் பிரதிவாதியை தெரியாது என தெரிய வருகின்றது, 1ம் பிரதிவாதி தனக்காக யாரையும் யாருடனும் எந்த காரணத்திற்காகவும், வழக்குரையில் சொன்ன காரணத்திற்காகவும் பேச அனுமதிக்கவில்லை அதிகாரம் கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதிக்கு A.மோகன், E.சுகுணா ஆகியோர்களை தெரியாது அவர்களை அவர்

வாழ்நாளில் பார்த்தது இல்லை. அவர்களுடன் எவ்வித பணப்பரிவர்த்தனையும் நடைபெறவில்லை.

(ii) பிரதிவாதிக்கு கடந்த 2015ம் வருடம் டிசம்பர் மாதம் எவ்வித பண தேவையும் ஏற்படவில்லை, அதனால் அவர் யாரிடமும் கடன் கேட்க அவசியம் எழவில்லை. அது பற்றிய வழக்குரை சங்கதிகள் உண்மையல்ல. பிரதிவாதி பணத்திற்காக யாரிடமும் பேசவில்லை, பேச வேண்டிய அவசியமும் இல்லை வழக்குரையில் சொன்னவாறு மூன்று நபர்களிடம் எவ்வித கடனும் கேட்கவில்லை. வழக்குரைபத்தி 5ல் சொன்னவாறு கடந்த 12.12.2015ம் தேதி 1ம் வாதியிடம் இருந்து ரூ.3,00,000/- கடனாக பெறவில்லை, வழக்குரையில் இந்த 1ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை இந்த 1ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொடுக்கவில்லை. அதன் படி 2ம் பிரதிவாதி அதில் சாட்சியாக கையொப்பம் செய்தார் என்ற கேள்விக்கே இடமில்லை.

(iii) பிரதிவாதிகள் எந்தக் கடனும் 1ம் வாதிக்கு கொடுக்க வேண்டியது இல்லை என்பதால் அதனை பெற உரிமையுள்ளதாக கூறுவது

ஏற்புடையதல்ல. அதேசமயம் இவ்வழக்கு உரிய காலவரைக்குள் தாக்கல் செய்யப்பட்டதா? இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது.

(iv) வழக்குரையில் சொல்லப்பட்ட அருணாச்சலம் என்பவர் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத நபர். அவரை இந்த 1ம் பிரதிவாதி கடந்த 3 ½ ஆண்டுகளுக்கும் மேலாக பார்க்கவில்லை. அவர் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை. அருணாச்சலம் இந்த 1ம் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை என வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ளனர்.

(v) பிரதிவாதிகள் அவருக்கு வந்த அறிவிப்பை வேண்டுமென்றே மறுக்கவில்லை, அந்த அறிவிப்பு அனுப்பிய முகவரியில் பிரதிவாதிகள் அந்த சமயத்தில் வசிக்கவில்லை, வாதி வழக்கு ஆவணங்கள் உண்மையானவைகள் அல்ல. அவற்றை 1ம் பிரதிவாதிக்கு எதிராக பயன்படுத்த முடியாது. வழக்குரையில் சொன்ன சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானவைதான். வழக்குரையில் காசோலை எவ்வாறு வந்தது என்று குறிப்பிடவில்லை. அதற்காக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன்

கீழ் குற்ற வழக்கு ஏற்படவில்லை. அவ்வாறு ஏற்பட்டால் இந்த 1ம் பிரதிவாதி அதனை எதிர் கொள்ள தயாராக உள்ளார்.

(vi) சட்ட அறிவிப்பை பிரதிவாதிகள் முகவரிக்கு அனுப்பவில்லை. 1ம் பிரதிவாதி ஒரு அருணாச்சலம் என்பவருடன் பலன்பெற தக்க பரிவர்தனைகள் சில மேற்கொண்டார் அதனால் அதன்படி பலன் பெறவில்லை. அவரிடம் கொடுத்த ஆவணங்களை 1ம் வாதி தவறாக பயன்படுத்தி உள்ளார். அந்த அருணாச்சலம் ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதனை 1ம் பிரதிவாதி தக்க வகையில் சந்திக்க தயாராக உள்ளார். மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டவைகள் அல்ல. அவற்றை கடந்த 02.07.2015ல் 1ம் பிரதிவாதி பெயரளவில் கொடுத்தார். மேற்படி ஆவணங்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய சில நடவடிக்கைகளை தடுக்க வேண்டி கொடுக்கப்பட்டன. அந்த ஆவணங்கள் அருணாச்சலத்திடம் திரும்ப கேட்டபொழுது அவர் அவற்றை அழித்து விட்டதாக கூறினார். இருப்பினும் அவர் சில விரும்பத்தகாத செயல்களை மேற்கொண்டார். ஆகவே போலீசார் அவரை எச்சரித்து அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விடுவோம் என கூறினர். மேற்படி

அருணாச்சால் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பணிபுரிகின்றார். அவர் அந்த நடவடிக்கைக்கு பயந்து, வேலை போய்விடும் என பயந்து அதனைவிட மோசமாக குற்ற வழியில் ஆவணங்களை 1ம் வாதியிடம் கொடுத்து இந்த வழக்கை ஏற்படுத்தியுள்ளார்.

(vii) ஆகவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்பதே எதிரிவழக்குரை சுருக்கம் ஆகும்.

வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

**3. எழுவினாக்கள்:**

1. Whether the plaintiff is entitled for a recovery of sum as prayed for?
2. To what other relief?

4. பின்னிட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது. வாதி தரப்பில் இறந்துபோன 1ம்வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.–1ன் முதல் விசாரணை சாட்சியத்தில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் வாதி வா.சா.2 ஆகவும், ஒரு அருணாச்சலம் என்பவரும், ஒரு இளங்கோவன்

என்பவரும் வா.சா.3 மற்றும் வா.சா.4 ஆக சாட்சியம் அளித்துள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தபடவில்லை, சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. (i) இருதரப்பும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்திலும், எழுத்துப்பூர்வமான வாதுரையிலும் வழக்குரை சங்கதிகளை வலியுறுத்தி வாதிட்டார். மேலும் பிரதிவாதிகள் வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்திய 12.12.2015 தேதியிட்ட ஆவணங்கள், 02.02.2016 தேதியிட்ட ஆவணம், 05.01.2018 தேதியிட்ட காசோலை ஆகியவற்றில் உள்ள கையொப்பங்களை மறுக்கவில்லை. அதன்படி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118, 139 கீழான அனுமானம் வாதிகளுக்கு ஆதரவாக தோன்றுகின்றது. மேலும் வாதிகள் தரப்பில் வா.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் வழக்கினை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளித்துள்ளனர். பிரதிவாதிகள் எதிர்வழக்குரை சங்கதிகளை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. பிரதிவாதிகள் சாட்சியம் அளிக்காத நிலையில் அவர்களுடைய எதிர் வழக்குரை சங்கதிகள்

சந்தேகத்திற்குரியதாகிறது. ஆகவே, வாதிகள் வழக்கினை தக்க சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கும் நிலையில் வாதிகள் கோரியவாறு வழக்கினை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார். மேலும், தனது தரப்பு வாதத்திற்கு ஆதரவாக AIR 1999 SC 1341 என்ற முன் தீர்ப்பினை மேற்கோள் காட்டினார்.

(ii) பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதிகள் வழக்குரை சங்கதிகளை நிரூபிக்கவில்லை. பிரதிவாதிகள் ஒரு இளங்கோவன் என்பவர் மூலம் பண உதவி கேட்டதாகவும், அவர் அருணாச்சலம் என்பவரை அதற்கு அணுகியதாகவும், மேற்படி அருணாச்சலம் 1ம் வாதியிடம் பிரதிவாதிகளுக்கு கடன் பெற்று கொடுத்ததாகவும் வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அது உண்மையல்ல. வா.சா.ஆ.2 பிராமிசரி நோட்டில் 1ம் பிரதிவாதியின் கையொப்பத்திற்கு கீழ் 02.07.2015 என தேதியிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு 10.09.2018 ல் முதன்முதலாக தாக்கல் செய்யபட்டுள்ளது. அதன்படி இந்த வழக்கு உரிய கால வரையரைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை. அதன்படி வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மேலும், மேற்படி அருணாச்சலத்திற்கு 1ம்

பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கடிதம் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாததாகும். இவ்வழக்கின் 1ம் வாதி இறந்துவிட்டதால் அவருடைய தாயார் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணையில் 1, 2 பிரதிவாதிகளை தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்துள்ள வா.சா.3 அருணாச்சலம், வா.சா.4 இளங்கோவன் ஆகியோரின் சாட்சியங்கள் வாதிகள் தரப்பு வழக்கினை நிரூபிக்க போதுமானதாக இல்லை. வாதிகள் வழக்குரையுடன் முன்னிலைப்படுத்திய காசோலை பற்றி வழக்குரையில் எவ்வித விவரத்தையும் குறிப்பிடவில்லை. அதேபோல், வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட 02.02.2016 தேதியிட்ட ஆவணத்தில் அன்றைய தினம் புதிதாக கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக வழக்குரையில் எவ்வித விளக்கமும் இல்லை. வாதிகள் வழக்கு பிராமிசரி நோட்டு வழக்குரையில் சொன்னவாறு ஏற்படுத்தப்பட்டது என்பதை நிரூபிக்கவில்லை. வாதிகள் தரப்பு சாட்சியங்கள் சந்தேகத்திற்குரியவைகளாக உள்ளது. ஆகவே, பிரதிவாதிகள் இவ்வழக்கில்

சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே, வாதிகள் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென வாதிட்டார்.

6. <u>எழுவினா – 1 க்கு தீர்வு</u>

**<u>எழுவினா – 1</u>** – வாதி கோரியவாறு வழக்குத்தொகை பெற உரிமை கொண்டுள்ளாரா?

(i) 1ம் வாதி கடந்த 10.09.2018 ம் தேதி இவ்வழக்கினை முதன்முறையாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்தபொழுது 1ம் வாதி இறந்துவிட்டார். 2 முதல் 4 வாதிகள் பின்னிட்டு தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 2ம் வாதி இறந்துபோன 1ம் வாதியின் தாயார். 3, 4 வாதிகள் 1ம் வாதியின் மகன்கள்.

(ii) வாதிகள் கடந்த 12.12.2015ம் தேதி 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு ரொக்கமாக ரூ.3 லட்சம் கடனாக கொடுத்தார். அதனை பெற்றுக்கொண்ட 1ம் பிரதிவாதி 12.12.2015 தேதியிட்ட கடன் ஆவணம் ஒன்றினை ரூ.50 முத்திரைத்தாளில் ஏற்படுத்திக்கொடுத்தார். 1, 2 பிரதிவாதிகள் கூட்டாக மேற்படி தொகைக்கு 12.12.2015 தேதியிட்ட முத்திரை ரசீதினை(Stamped receipt) எழுதிக்கொடுத்தனர். மேலும், 1ம் பிரதிவாதி 12.12.2015 தேதியிட்ட

மேற்படி தொகைக்கு பிராமிசரி நோட்டு ஒன்றினை எழுதிக்கொடுத்தார். அதில் 2ம் பிரதிவாதி சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை 12% ஆண்டுவட்டியுடன் திரும்பத் தருவதாக உறுதியளித்தனர் என இவ்வழக்கினை முன்வைத்துள்ளனர்.

(iii) வழக்குரை பத்தி 11ல் 20.12.2015 தேதியில் கடன் ஆவணம், பிராமிசரி நோட்டு, ரசீது ஆகியவைகள் பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, விவரம் வழக்குரை பத்தி 5ல் சொன்ன விவரத்திற்கு முரணாக உள்ளது அதாவது, வழக்குரை பத்தி 5ல் மேற்படி ஆவணங்கள் 12.12.2015ம் தேதி ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

(iv) மேற்படி கடன் ஆவணம், பிராமிசரி நோட்டு, ரசீது ஆகியவைகள் முறையே வா.சா.ஆ 1, 2, 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன இவ்வழக்குரை சங்கதிகளின்படி அந்த ஆவணங்கள் ஏற்பட்ட தேதி குறித்து சந்தேகம் எழுகின்றது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தினை பரிசீலனை செய்யும்பொழுது அது "ரூபாய். 3,00,000/–க்கு கடன் பத்திரம்" என்று தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. அது ரூ.50 முத்திரைத்தாளில் எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் 12.12.2015

என்று தேதியிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் கடன் பெறுபவர் என்ற இடத்தில் கையொப்பத்திற்கு கீழ் 20.12.2015 என இரண்டு பக்கங்களிலும் தேதி எழுதப்பட்டுள்ளது. அதேபோல், வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பிராமிசரி நோட்டில் 12.12.2015 என தேதி எழுதப்பட்டுள்ளது. மேற்படி பிராமிசரி நோட்டில் கடன் பெற்றவர் கையொப்பம் செய்யுமிடத்தில் வருவாய் முத்திரை வில்லை மீது இரண்டு கையொப்பங்கள் உள்ளது. முதலாவது கையொப்பத்திற்கு கீழ் 02.07.2015 என தேதி எழுதப்பட்டுள்ளது. அதில் சாட்சியாக 2ம் பிரதிவாதி கையொப்பம் இல்லை.மேலும் அந்த ஆவணத்தில் அது யாரால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று எழுதப்படவில்லை.

(v) மேலும், வா.சா.ஆ.3 ஆவணம் கடன் ரசீது என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. அது 12.12.2015ல் எழுதப்பட்டதாக தேதியிடப்பட்டுள்ளது. அதனை, 1ம் பிரதிவாதி 1ம் வாதியிடம் ரூ.3 லட்சம் கடன் பெற்றுக்கொண்டதற்காக 1ம் பிரதிவாதி அவருடைய மனைவி 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. அந்த

ஆவணத்தில் வருவாய் முத்திரை வில்லை மீது ஏற்படுத்தப்பட்டுள்ள முதாலாவது கையொப்பத்தின் கீழ் 02.07.2015 என தேதியிடப்பட்டுள்ளது.

(vi) மேற்படி, வா.சா.ஆ.1 ஆவணத்தில் 12.12.2015 என தேதி எழுதப்பட்டுள்ளது. அதே ஆவணத்தில் கடன் பெறுபவர் கையொப்பத்தின் கீழ் 20.12.2015 என தேதியிடப்பட்டுள்ளது. வழக்குரை பத்தி 11 ல் அந்த தேதி சொல்லப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.2 பிராமிசரி நோட்டு, வா.சா.ஆ.3 ரசீது ஆகியவற்றில் 12.12.2015 என தேதி இடப்பட்டுள்ளது. இருப்பினும், அதே ஆவணங்களில் கடன் பெறுபவர் கையொப்பத்திற்கு கீழ் 02.07.2015 என தேதி எழுதப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2,3 ஆகியவற்றில் அவ்வாறு 02.07.2015 என தேதி எழுதப்பட்டுள்ளது சம்மந்தமாக வழக்குரையில் எவ்வித விளக்கமும் சொல்லப்படவில்லை. அதாவது மேற்படி ஆவணங்களில் 12.12.2015 என தேதிகள் எழுதப்பட்டிருந்தாலும் அதில் கடன் பெற்றதாக சொல்லும் நபர் தனது கையொப்பத்திற்கு கீழ் 02.07.2015 என தேதி குறிப்பட்டு எழுதியுள்ள நிலையில் அதற்கான விளக்கம் எதனையும் வழக்குரையில் வாதிகள் தரப்பு குறிப்பிடவில்லை. மேலும் வழக்குரையில் மேற்சொன்னவாறு வா.சா.ஆ 1 முதல் 3

ஆவணங்கள் 12.12.2015, 20.12.2015 ஆகிய தேதிகளில் ஏற்படுத்தப்பட்டதாக முரண்பட்டு சொல்லப்பட்டுள்ளது.

(vii) இவ்வழக்கில் 1ம் வாதி உயிருடன இருந்த சமயத்தில் வா.சா.1 ஆக முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணைக்கு செய்யப்படும் முன்பு இறந்துவிட்டார். அதன்படி, மேற்படி வா.சா.1 ன் சாட்சியம் முழுமையடையவில்லை. ஆகவே அதனை இவ்வழக்கில் வாதிகள் தரப்பிற்கு ஆதரவான சாட்சியமாக எடுத்துக்கொள்ள இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. வா.சா.1ன் தாயார் 2ம் வாதி வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் 12.12.2015 ல் ஏற்படுத்தப்பட்டதாக பத்தி 5ல் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் கடன் பெறுபவர் கையொப்பத்தின் கீழ் 20.12.2015 என்றும், 02.07.2015 என்றும் தேதிகள் எழுதப்பட்டுள்ளது சம்மந்தமாக எவ்வித விளக்கத்தையும் குறிப்பிட்டு முதல் விசாரணையில் சொல்லவில்லை. மேலும், முதல் விசாரணை பத்தி 11ல் மேற்படி வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் 12.12.2015ல் ஏற்படுத்தப்பட்டதாக கூறியுள்ளார்.

வழக்குரையில் பத்தி 11ல் மேற்படி ஆவணங்கள் 20.12.2015ல் ஏற்படுத்தப்பட்டது என சொல்லியுள்ள விவரம் பற்றி முதல் விசாரணையில் எவ்வித விளக்கமும் சொல்லவில்லை.

(viii) இவ்வழக்கில் மேற்படி வழக்குரை கடன் தொகையை 1ம் பிரதிவாதிக்கு பெற்றுக்கொடுத்ததாக சொல்லும் அருணாச்சலம் என்பவர் வா.சா.ஆ.3 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய முதல் விசாரணையில் அவர் முன்னிலையில் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டதாக கூறியுள்ளார். அவர் தன்னுடைய 29.08.2023 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் பக்கம் 7ல் **"12.12.2015 தேதியிட்ட மோகன் எழுதிக்கொடுத்த கடன் உறுதிச்சீட்டு, ராஜ்கண் எழுதிக்கொடுத்த கடன் உறுதிசீட்டு மற்றும் கடன் ரசீதுகளில் 02.07.2015 என்று கையெழுத்து போடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்"** என சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு 02.07.2015 என தேதியிடப்பட்டுள்ளது சம்மந்தமாக அவர் அவருடைய முதல் விசாரணையில் எவ்வித விளக்கமும் சொல்லவில்லை. அதேபோல், 1ம் பிரதிவாதியை மேற்படி அருணாச்சலத்திற்கு அறிமுகம் செய்து வைத்ததாக வழக்குரையில்

சொல்லப்பட்ட இளங்கோவன் என்பவர் வா.சா.ஆ.4 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய முதல் விசாரணையில் பிராமிசரி நோட்டு, முத்திரைத்தாளில் எழுதப்பட்ட உறுதிமொழி, காசோலைகள் ஆகியவற்றை 1, 2 பிரதிவாதிகள் அவர் முன்னிலையில் ஏற்படுத்தி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் பக்கம் 2ல் **"உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ,2 பிராமிசரி நோட் தான் நீங்கள் சொன்ன ஆவணமா என்றால் ஆமாம் அதை யார் எழுதினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதி 02.07.2015 என தேதி எழுதி கையொப்பம் போட்டாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை"** என சாட்சியம் அளித்துள்ளார் அவருடைய சாட்சியத்திலும் 12.12.2015ல் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும் வா.சா.ஆ.2, 3 ஆவணங்களில் 02.07.2015 என கடன் பெற்ற நபர் கையொப்பத்தின் கீழ் தேதி எழுதியுள்ளது பற்றி எவ்வித விளக்கமும் சொல்லப்படவில்லை. அவர் அவ்வாறு 02.07.2015 தேதி எழுதப்பட்டதை பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

(ix) மேற்படி வழக்குரை விவரங்கள், வா.சா.2 முதல் 4 வரையிலானவர்களின் சாட்சியங்கள் ஆகியவற்றின்படி, வாதிகள் தரப்பு

வா.சா.2, 3 ஆவணங்களில் கடன் பெற்ற நபர் தனது கையொப்பத்தின் கீழ் 02.07.2015 என தேதி எழுதியுள்ளது சம்மந்தமான விளக்கம் எதுவும் சொல்லப்படவில்லை என அறிய முடிகின்றது. அதன் காரணமாக மேற்படி ஆவணங்கள் 12.12.2015 ல் தான் பிரதிவாதிகளால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது என்பது சந்தேகத்திற்குரியதாகின்றது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடன் பெற்ற நபர் அவருடைய கையொப்பத்திற்கு கீழ் 20.12.2015 என தேதி குறிப்பிட்டுள்ளார். அதற்கும் வா.சா. 2 முதல் 4 வரையிலான சாட்சிகள் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை, மேலும், வழக்குரை பத்தி 11 ல் மேற்படி ஆவணமும் வா.சா.ஆ.2 , 3 ஆவணங்களும் 20.12.2015 ம் தேதியிட்டவைகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி வா.சா.ஆ.1 ஆவணமும் வழக்குரை பத்தி 5 ல் சொன்னவாறு 12.12.2015 ம் தேதிதான் ஏற்படுத்தப்பட்டது என்பது சந்கேத்திற்குரியதாகின்றது.

(x) இவ்வழக்கில் வாதிகள் வழக்குரை பத்தி 7 ல் 1 ம் பிரதிவாதி வா.சா.3 அருணாச்சலத்திற்கு 13.09.2017 ல் ஒரு எழுத்துப்பூர்வமான உறுதிமொழி கடிதம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அதனை வாதி

12.12.2015 தேதியிட்ட பிராமிசரி நோட்டு மற்றும் 02.02.2016 தேதியிட்ட கடன் புதுப்பித்தல் ஆவணம்(Renewal Loan Document)உடன் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 02.02.2016 தேதியிட்ட ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் "கடன் பத்திரம்" என தலைப்பிடப்பட்டுள்ளது. அதில் 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. அதில் பக்கம் 2ல் ***" என்னுடைய குடும்ப செலவிற்காக பணம் தேவைப்படுவதால், தங்களிடமிருந்து கடனாக ரூபாய். 3,00,000/- (எழுத்தால் ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-த்தை இன்றைய தேதியில் கீழ்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் நான் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டேன் என்பதற்கு இதுவே இரசீது"*** , என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 12.12.2015ம் தேதி 1ம் வாதி கொடுத்த கடனை புதுப்பித்துக்கொள்வதாக எவ்வித சங்கதியும் எழுதப்படவில்லை. மாறாக 02.02.2016ம் தேதி 1ம் பிரதிவாதி ரூ.3 இலட்சம் கடன் பெற்றதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் மேற்படி 02.02.2016 தேதியில் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தில் உள்ள விவரம்

சம்மந்தமாக எவ்வித விளக்கமும் சொல்லப்படவில்லை. மேற்படி ஆவணம் எவ்வாறு, எப்பொழுது, எங்கு வைத்து எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று வழக்குரையில் எவ்வித விவரமும் சொல்லப்படவில்லை.

(xi) இவ்வழக்கில் வழக்குரையுடன் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்ட 5.01.2018 தேதியிட்ட காசோலை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் பற்றி வழக்குரையில் எவ்வித விவரமும் குறிப்பிடப்படவில்லை. வா.சா.2 தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில் மேற்படி ஆவணங்கள் பற்றி குறிப்பிடவில்லை. அவர் தனது 20.12.2018 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் ***"வா.சா.ஆ.5 ஆன காசோலையை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அந்த காசோலையும் எனது மகன் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்த போது கொடுக்கப்பட்டதாகும்"*** என சாட்சியம் அளித்துள்ளார்.

(xii) இவ்வழக்கின் வா.சா.4 தன்னுடைய முதல் விசாரணையில் பத்தி 5 ல் ***"The above named defendants 1& 2 jointly and severally executed the following documents i.e., pro note, undertaking in a N.J. Paper and cheques in the house of Mr.A.Rajkan infavour of A.Rajkan, A.Mohan and E.Suguna in my***

*presence"* என சாட்சியம் அளித்துள்ளார். 1ம் பிரதிவாதி கடன் பெற்றதாக சொல்லப்படும் தேதியில் 1ம் வாதிக்கு மற்ற ஆவணங்களுடன் காசோலையும் கொடுத்ததாக வா.சா.4 மட்டும் வாதி தரப்பில் முதன்முறையாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு கடன் கொடுத்த தேதியில் 1ம் பிரதிவாதி வா.சா.5 காசோலை கொடுத்ததாக வழக்குரையில் எவ்வித விவரமும் சொல்லப்படவில்லை. ஆகவே வா.சா.2, 4ன் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இருப்பினும், மேற்படி வா.சா.ஆ.5 காசோலை வா.சா.2, 4 ஆகியோரின் சாட்சியங்களின் படி அதில் எழுதப்பட்டுள்ள 05.01.2018ம் தேதி கொடுக்கப்படவில்லை என தெரியவருகிறது. அதன்படி அது உரிய மறுபயனுக்காக கொடுக்கப்பட்டது என்பதையும் வாதி தரப்பு நிரூபிக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xiii) வாதிகளின் தரப்பில் வா.சா.ஆ.7, 8 ஆக 05.02.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்புகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி அறிவிப்புகளில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்ற வழக்கு தாக்கல் செய்யும் உரிமையை நிலை நிறுத்திக்கொள்வதாகவும், 12.12.2015 தேதியிட்ட பிராமிசரி நோட்டில்

சொல்லப்பட்ட ரூ.3 லட்சத்தினை ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடன் பிரதிவாதிகள் திரும்ப செலுத்த வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

(xiv) மேற்கண்ட விவாதங்களின்படி வா.சா.ஆ.2 பிராமிசரி நோட்டு, வா.சா.ஆ.3 இரசீது ஆகியவை வழக்குரையில் சொன்னவாறு 12.12.2015ம் தேதி பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டன என்பதை வாதிகள் தரப்பு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xv) இவ்வழக்கின் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் 02.07.2015ம் தேதி வா.சா.3 அருணாச்சலத்திடம் வழங்கப்பட்ட ஆவணங்களை வாதி தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அருணாச்சலத்திடம் கொடுத்த ஆவணங்களின் பெயரில் பிரதிவாதிகள் பலனடையவில்லை என்றும், அருணாச்சலத்திடம் மேற்படி ஆவணங்களை திரும்ப கேட்ட போது அவற்றை அழித்துவிட்டதாக கூறிவிட்டார் என்றும் எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

(xvi) மேற்படி வா.சா.ஆ.2, 3 ஆவணங்களில் கடன் பெறுபவர் கையொப்பத்திற்கு கீழ் 02.07.2015 என தேதி எழுதப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைத்த எதிர்வாதத்தில் சொன்னவாறு அவை

02.07.2015 ம் தேதி ஏற்படுத்தப்பட்டவைகள் என்பதற்கு போதிய நிகழ்வுகூறுகள் உள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xvii) மேற்படி, வா.சா.ஆ.2 ,3 ஆவணங்கள் கடந்த 02.07.2015 ம் தேதி ஏற்பட்டது என தெரியவரும் நிலையில், இவ்வழக்கு 10.09.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு வா.சா.ஆ.2 பிராமிசரி நோட்டின் பேரிலான கடனை திரும்ப்பெற மூன்று ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்ற நிலையில் காலவரையரைச்சட்டம் சரத்து 35 ன் படி உரிய கால வரையரைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. இவ்வழக்கின் வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணம் 12.12.2015 ம் தேதி ஏற்படுத்தப்பட்டது என்பது சந்கேத்திற்குரியது என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கடன் பெறுபவர் கையொப்பத்திற்கு கீழ் 20.12.2015 தேதி எழுதப்பட்டுள்ளது அதில் வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் பற்றி குறிப்பு ஏதும் இல்லை. மேற்படி 20.12.2015 ம் தேதி 1 ம் பிரதிவாதிக்கு ரூ3 லட்சம் கடன் கொடுத்ததாக வாதிகள் வழக்கு எதனையும் முன்னிலைப்படுத்தவில்லை. அதேபோல்

02.02.2016ம் தேதி ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்திலும், வா.சா.ஆ.1, 2, 3 ஆவணங்கள் பற்றி குறிப்பு ஏதும் இல்லை. 12.12.2015ம் தேதி 1ம் பிரதிவாதி 1ம் வாதியிடம் கடன் பெற்றதாக அந்த ஆவணத்தில் குறிப்பு ஏதும் இல்லை. மேற்படி கடனை ஒப்புக்கொள்வதாகவும், கடன் நீட்டிப்பு செய்துகொள்வதாகவும் அதில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அந்த ஆவணத்தில் சொன்னவாறு 02.02.2016ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு ரூ.3 இலட்சம் 1ம் வாதி கடன் கொடுத்ததாகவும் வாதிகள் வழக்கு முன்வைக்கவில்லை. வா.சா.ஆ.5 காசோலை பற்றி வழக்குரையில் எவ்வித விபரமும் சொல்லப்படவில்லை. மேற்படி வா.சா.2, 4 ஆகியோரின் சாட்சியங்களில் காசோலை கடன் பெற்றபொழுது 1ம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அதன்படி, காசோலையில் எழுதப்பட்டுள்ள 05.01.2018ம் தேதியன்று அந்த காசோலை 1ம் பிரதிவாதியால் வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது. ஆகவே 02.07.2015ம் தேதி ஏற்படுத்தப்பட்டதாக தெரியவரும் வா.சா.ஆ. 2 பிராமிசரி நோட்டில் கண்ட கடன் தொகைக்காக வழக்கு தாக்கல் செய்ய உள்ள காலவரையரையை வா.சா.ஆ.1, 4, 5 ஆவணங்கள் நீட்டிக்கும்

விதமாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றும் அவ்வாறு அவைகள் ஏற்படுத்தப்பட்டது என்பதையும் வாதிகள் நிரூபிக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அதன்படி, வாதிகள் வழக்கு உரிய காலவரைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xviii) மேலும், பிரதிவாதிகள் வா.சா.3 அருணாச்சலத்திடம் மட்டும்தான் சில பரிவர்தனைகள் செய்யத்ததாகவும், அது பலனளிக்கவில்லை என்றும், அதற்காக கொடுக்கப்பட்ட ஆவணங்களை வாதி தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றும் எதிர்வாதம் முன்வைத்துள்ளனர். வாதிகள் வழக்குரையில் பத்தி 7ல் மேற்படி அருணாச்சலம் 1ம் பிரதிவாதியை அவர் பணிபுரிந்த மருத்துவமனையில் 13.09.2017ல் நேரில் சந்தித்தபோது 1ம் வாதி மற்றும் அவரின் சகோதர, சகோதரி கொடுத்த மொத்த கடன் தொகை ரூ.10 இலட்சத்தினை 30.10.2017க்குள் திரும்பத்தருவதாக அருணாச்சலத்திற்கு ஆதரவாக ஒரு எழுத்துப்பூர்வமான உறுதிமொழிக் கடிதம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளனர். வா.சா.ஆ.3 அருணாச்சலம் தன்னுடைய 29.08.2023 தேதியிட்ட குறுக்கு விசாரணையில்

***"13.09.2017 ல் டாக்டர் எழுதி கொடுத்தது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் ஆமாம். அது வா.த.சா.ஆ.5 ஆக அ.வ.எண்.4892/2018 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நானும் இளங்கோவும் செல்லும் போது வா.த.சா.ஆ.5 ல் அருணாச்சலம் அவர்களிடம் என் குடும்ப தேவைக்காக வாங்கிய ரூ.10 லட்சத்தை வரும் 30.10.2017 அன்று திருப்பி தருவதாக எழுதிக்கொடுக்கிறேன். பணமாக தரப்படும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்"*** என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அதே 29.08.2023 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் அவர் ***" 12.01.2019 அன்று நான் வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் ரூ.10 லட்சம் ரூபாய் தொடர்பாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். கஜேந்திரராஜ்க்கு எதிராக கொடுத்தேன். கஜேந்திரராஜ் பணம் கேட்டால் அது பண்ணி விடுவேன் இது பண்ணி விடுவேன் என்று ஆட்களை வைத்து மிரட்டியதால் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனுவை தாக்கல் செய்ய இயலுமா என்றால் எங்கு இருக்கிறது என்று ஞாபகம் இல்லை இருந்தால் தாக்கல் செய்கிறேன்.”*** என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் வழக்குரையில் சொன்ன 13.09.2017 தேதியிட்ட கடிதத்தில் 1ம் பிரதிவாதி

வா.சா. 3 அருணாச்சலத்திடம் ரூ.10 லட்சம் கடனாகப் பெற்றிருந்ததாகவும் அதனை திரும்ப தருவதாகவும், எழுதி கொடுத்துள்ளதாக வா.சா.3 அருணாச்சலம் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், இவ்வழக்கு தாக்கல் செய்தபிறகு மேற்படி ரூ.10 லட்சம் கடனுக்காக காவல் துறையில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மேற்படி அருணாச்சலம் புகார் கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். அதன்படி பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொன்னவாறு அருணாச்சலத்திடம் சில பரிவர்தனைகள் நடந்தது என்றும், 1ம் வாதியை 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றும் முன்வைத்துள்ள எதிர்வாதத்திற்கு போதிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவே தெரியவருகின்றது.

(xix) இங்கு வாதிகள் வழக்கு பிராமிசரி நோட்டு வா.சா.ஆ.2, ஆனது 12.12.2015 தேதியில் எழுதப்பட்டது என்பதை நிரூபிக்கவில்லை என்ற நிலையிலும் பிரதிவாதிகள் முன்வைத்த எதிர்வாதத்திற்கு வா.சா.3 ன் குறுக்கு விசாரணை சாட்சியப்படி போதிய நிகழ்வுகூறுகள்/சாத்தியக்கூறுகள் உள்ளதாக தெரியவருகின்றது என்ற நிலையிலும், பிரதிவாதிகள் தங்களை சாட்சிகளாக இவ்வழக்கில்

முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் அவர்களுடைய எதிர்வாதம் நிரூபிக்கப்படவில்லை என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அதேசமயம் வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்திய முன்தீர்ப்பும் இவ்வழக்கு சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xx) மேற்கண்ட விவாதங்களின்படி, வாதிகள் கோரிய வழக்குத்தொகை வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்பதை வாதிகள் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அவ்வாறே இந்த எழுவினா 1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**<u>எழுவினா –2</u>** வேறு என்ன பரிகாரங்கள்?

(i) மேற்கண்ட எழுவினா 1ல் கண்ட முடிவின் படி வாதிக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(ii) மேற்கண்ட எழுவினா 1 ல் கண்ட முடிவின்படி வாதிகள் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவ்வாறே வாதிகள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக வாதிகள் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது. மேலும் இவ்வழக்கின் தன்மை கருதி செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு இன்று 29 ஆம் தேதி ஜூலை மாதம் 2026 ல் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARTHIKEYAN Digitally signed by KARTHIKEYAN

18 வது உதவி நீதிபதி(FAC)
18 வது உதவி மாநகர உரிமையியல்
நீதிமன்றம், சென்னை.

**பின் இணைப்பு :**

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

1. வா.சா.1 – ஏ. ராஜ்கன் (1ம் வாதி)
2. வா.சா.2 – ஏ,ஞானசௌந்தரி(2ம் வாதி)
3. வா.சா.3 – ஏ.அருணாச்சலம்
4. வா.சா.4 – கே.இளங்கோவன்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | வா.சா.ஆ.1 | 12.12.2015 | கடன் ஆவணம் | அசல் |
| 02. | வா.சா.ஆ.2 | 12.12.2015 | பிராமிசரி நோட்டு | அசல் |
| 03. | வா.சா.ஆ.3 | 12.12.2015 | முத்திரையிடப்பட்ட ரசீது | அசல் |
| 04. | வா.சா.ஆ.4 | 02.02.2016 | கடன் புதுப்பித்தல் ஆவணம் | அசல் |
| 05. | வா.சா.ஆ.5 | 05.01.2018 | காசோலை | அசல் |
| 06. | வா.சா.ஆ.6 | 12.01.2018 | வங்கியின் திரும்ப அனுப்பும் குறிப்பாணை | அலுவலக நகல் |
| 07. | வா.சா.ஆ.7 | 05.02.2018 | சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| 08. | வா.சா.ஆ.8 | 05.02.2018 | சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| 09. | வா.சா.ஆ.9 | 07.02.2018 | திரும்பப்பட்ட அஞ்சல் உறைகள்- இரண்டு | அசல் |
| 10. | வா.சா.ஆ.10 | 23.10.2009 | விற்பனை பத்திரம் | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை</u>**

KARTHIKEYAN Digitally signed by KARTHIKEYAN

18 வது உதவி நீதிபதி(FAC)
18 வது உதவி மாநகர உரிமையியல்
நீதிமன்றம், சென்னை.

**<u>Draft/Fair Judgment</u>**

O.S. No.4890/2018

Date: 29.07.2026

**XVIII Assistant Court**
**City Civil Court, Chennai**